பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 19] சென்னை: ஐப்பசி 4 (21—10—71) வியாழன் வெளியீடு: ஐப்பசி 5 (22—10—71) வெள்ளி [இதழ்: 106

முதலமைச்சர் நிதி-க்கு நன்கொடைகட்கு வரி விலக்கு

★

சென்னை, அக். 21—

"முதல் அமைச்சரின் துயர் தணிப்பு நிதிக்கு அளிக்கப்படும் நன்கொடைகளுக்கு வருமான வரியிலிருந்து (அந்தத் துறையினர் நிர்ணயித்துள்ள வரம்புகளுக்கு உட்பட்டு) விலக்கு அளிக்கப்படும்" என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பந்தயம் போன்ற பரீட்சை முறை?

மாணவர்களின் திறமையை அறியும் அளவுகோலாக அமைய வேண்டும்

தக்க முறையில் திருத்தியமைக்கக் கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் யோசனை

சென்னைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் உரை

சென்னை, அக். 21—

"பரீட்சை முறைகள் பந்தயங்கள் போலாகிவிட்டன; திறமைகளை அறிவதற்குரிய திட்டவட்டமான முறையாக இருக்கவில்லை; பரீட்சை எழுதுபவர்களின் கல்வித் திறனை அறியும் உண்மையான சாதனையாக இராமல், அது ஒரு வித்தையாகி விட்டது; எனவே, ஒவ்வொரு மாணவனுடைய அன்றாடப் பணியினையும் — திறமைகளையும் — குணநலன்களையும மதிப்பிடுவதற்குரிய திட்டத்தைக் கொண்டுவர வேண்டும்; நேர்முகப் பேட்டிப் பரீட்சை முறை, எழுதுபவர்களின் பேச்சுத் திறமை — புத்தி நுட்பம் — சொல்லாட்சி முதலியவற்றை அறிவதற்குச் சிறந்த வழியாகும்"

என்று தமிழகக் கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் நேற்று சென்னைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா உரையாற்றுகையில் குறிப்பிட்டார்; அவர், தமது உரையில் மேலும் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு: —

அறிவியல் ஆவலைத் தூண்டுவது அவசியம்

"வருங்காலப் பணிகளுக்கேற்றவாறு நமது கல்வியைச் சீரமைத்து — பலப்படுத்தி — உயிர் ததும்புமபடி செய்வதில் கல்வியாளர்கள் ஒத்துழைக்க வேண்டும.

மாணவனின் நினைவுச் சக்திக்குப் பயிற்சி அளிப்பதைவிட, மாணவனின் அறிவியல் ஆவலைத் தூண்டுவது கல்வியின நோக்கமாக இருக்கவேண்டும்.

மாணவனின் அறிவு வளர்ந்துகொண்டே இருப்பதற்கு உதவ வேண்டும்.

புதிய உருவாக்கங்கள் — கண்டுபிடிப்புகளைத் தூண்டுவதற்குக் கல்வி தகுந்த கருவியாகும.

நன்னம்பிக்கை ஏற்பட வழிகோலுவீர்

'உற்பத்தித் திறனுடன் கல்வி பிணைந்ததாக அமைய வேண்டும்' என்று தேசியக் கல்விக் கமிஷன் அறிக்கை கூறுகிறது.

மாணவர்கள் வாழ்க்கையில் புகும்போது தொழில்களைத் துவக்கிடுபவராகவும், வேலை வாய்ப்புக்களை உண்டாக்குவோராகவும் அமைவதற்கான தன்னம்பிக்கை பெற்றவர்களாக இருக்கவேண்டும் என்பது கல்வியின் மூன்றாவது பணியாகும்.

சாதாரண மாணவனிடமும் அரிய வாய்ப்புக்களை உண்டாக்குவதற்கு ஆசிரியர்கள் பாடுபட வேண்டும்.

மாணவர் நலக் குழு

மாணவர்களிடையே கிளர்ச்சி மனப்பான்மை ஏற்படுவதைத்

தவிர்க்க, மாணவர் நலக் குழுக்களை அமைக்கலாம்; கல்லூரி முதல்வர் தலைமையில் இயங்கும் இக்குழுவில், பெற்றோர் சார்பில் மூவர் — ஆசிரியர் குழாம் சார்பில் மூவர் — மாணவர் சார்பில் மூவர் இருக்கலாம்; மாணவர்களுடைய நல உரிமைகளைப் பற்றி விவாதித்து நல்வழி காண இது தக்க வழியாகும்.

தாய் மொழியிலேயே கல்விப் பயிற்சி

கல்வியமைச்சர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"பல்கலைக் கழகக் கல்வியைப்

"பல்கலைக் கழகக் கல்வியைப் பற்றிப் பேசுகின்ற நேரத்தில் பயிற்சி மொழியைப் பற்றிக் குறிப்பிடுவது பொருத்தமானதாக இருக்கும்.

தமிழக அரசின் இரு மொழிக் கொள்கையைப் பற்றித் தெளிவான அடிப்படையில் பல நேரங்களில் விளக்கம் கூறியிருக்கிறோம்.

தாய்மொழியிலும் — ஆங்கிலத்திலும் போதிய பயிற்சி பெறுவதற்கு மாணவர் சமுதாயத்துக்கு ஏராளமான வாய்ப்புக்கள் இருக்கின்றன.

"பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும தாயமொழியே பயிற்சி மொழியாக இருந்தாலதான, மாணவர்கள் பயனுள்ள அறிவைப் பெறமுடியும் — தாங்கள் கற்ற கருததுக்களைப் பொருள் பிறழாது எடுத்துக கூறமுடியும" என்பது, கல்வித் துறையில் பொருததமான கொள்கையாக ஒப்புகொள்ளப்பட்டுள்ளது.

"மாணவர்கள் தாங்கள் கற்கும் கலையின பொருளை உணருவதற்காக மட்டுமன்றி, சமுதாயத்தினின்று விலகிவிடாமல் இருப்பதற்கும் தாய் மொழி மூலம கலவி கற்பதுதான் சிறந்த முறை" என்பதை மகாதமா காந்தி உட்படப் பல தேசியத தலைவர்கள் வலியுறுததியுள்ளனர்.

ஆராய்ச்சித் துறைக்கு ஊக்கம் அளித்திட இயலும்

டாக்டர் இராதாகிருஷ்ணனின தலைமையில அமைக்கப்பட்ட கல்லூரிக் கல்விக் கமிஷன், 1948-ம் ஆண்டிலேயே பினவரும் பரிந்துரையை வழங்கியது:—

"கல்விக் கண்ணோட்டத்தின்படி பார்த்தாலும், ஒரு சனநாயக சமூகத்தின் கண்ணோட்டத்தின்படி பார்த்தாலும், மாணவர்களுக்கு அளிக்கப்படும் கல்வி அவர்களின் தாய்மொழி வாயிலாகவே அமைய வேண்டும்.

"இயல்பாகத் தாய்மொழி மூலம் கல்வி கற்கின்றவர்கள் உயர்மட்டக் கல்வி பெறுவதுடன், தங்கள் சிந்தனை வளத்தின் மூலமாக அறிவின் எல்லைகளாக விளங்கும் ஆராய்ச்சித் துறைக்கு மிகப் பெரும் ஊக்கம் அளித்திட முடியும்."

டாக்டர் இராதாகிருஷ்ணன் குழு அளித்த இந்தப் பரிந்துரையைத் தேசியக் கல்விக் குழு அப்படியே ஏற்றுக்கொண்டது.

ஒழுக்க நெறி உயர வேண்டுமானல்...

நம் நாட்டின் அறிவாற்றலையும் — ஒழுக்க உயர்வையும் பெருக்குவதற்கான கல்வி முறை அமைய வேண்டுமானல், தாய் மொழிவழிக் கல்வி ஒன்றின் மூலம்தான் அதைச் சாதிக்க முடியும் — என்பது வலிமையான ஒரு காரணமாகும; இந்தக் காரணத்தின் அடிப்படையில் தமிழக அரசின் பயிற்சி மொழிக் கொள்கையைம் மலரும் பாராட்டவே செய்வார்கள்.

தவறு ஏதும் இல்லை

ஆங்கில மொழியில் உள்ள விஞ்ஞானச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை நாம கண்டுபிடித்தாக வேண்டும்.

நுணுக்கம் வாய்ந்த — சிக்கலான சொற்களுக்கு உலக வழக்கில் உள்ளவற்றையே நாமும் பயன்படுத்துவதில் தவறு இல்லை.

தாய் மொழியை அறிமுகப் படுத்துவதனல் ஆங்கிலத்தின் இடத்துக்கு எந்தவிதக் கேடும் வந்துவிடப் போவதில்லை.

(4-ம் பக்கம் பார்க்க)

சிண்டிகேட் வேட்பாளரைக் காணேம்!

பொள்ளாச்சி, அக். 20—

பொள்ளாச்சித் தொகுதியில் நடைபெறவிருக்கும் நாடாளுமன்ற இடைத் தேர்தலில், சிண்டிகேட் சார்பில் நடராசன் என்பவர் நிறுத்தப்படவிருப்பதாகக் கூறப்பட்டது. இவருக்கு சிண்டிகேட் கட்சியின் தேர்தல் சின்னமான இராட்டைச் சின்னத்தை ஒதுக்குமாறு தமிழ்நாடு சிண்டிகேட் கட்சித் தலைவர் திரு. கக்கன் மாவட்டக் கலெக்டருக்குக் கடிதம் எழுதியிருந்ததாகவும் கூறப்படுகிறது.

ஆனல், வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்குரிய கடைசி நாளான இன்று பிற்பகல் 3-மணி வரை சிண்டிகேட் சார்பில் யாரும் மனுத் தாக்கல் செய்ய வரவில்லை. (3-மணியுடன் மனுத் தாக்கல் முடிந்துவிட்டது.)

தி.மு.க. வேட்பு மனு

தி.மு.க. சார்பில் தோழர் மோகன்ராசு இன்று காலை 11-30 மணிக்கு. மாவட்டக் கலெக்டரிடம் வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார்.

அதுபோது அறநிலைய அமைச்சர் திரு. மு. கண்ணப்பனும் உடனிருந்தார்.

கோவை மாவட்ட தி.மு.க. சட்டமன்ற — நாடாளுமன்ற உறுப்பினர்களும் மோகன்ராசுடன் வந்திருந்தனர்.

வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்குமுன் தோழர் மோகன்ராசு, அண்ணா சிலைக்கு மாலையணிவித்துவிட்டு வந்தார்.

மாநகராட்சி இடைத் தேர்தலில் தி. மு. க. வெற்றி

கழக வேட்பாளர் காமாட்சி செயராமன் வாகை சூடினர்

சென்னை, அக். 21—

சென்னை மாநகராட்சி மன்றத்துக்கு 19-வது வட்டத்தில் நடைபெற்ற தேர்தலில் நமது கழக வேட்பாளர் திருமதி காமாட்சி ஜெயராமன், சிண்டிகேட் வேட்பாளரைவிட 387 வாக்குகள் அதிகம் பெற்று வாகை சூடினர்.

மாநகராட்சி மன்ற தி.மு.க. உறுப்பினர் திரு. ந. செயராமன் இயற்கையெய்தியதையடுத்து நடைபெற்ற இந்த இடைத் தேர்தலில் — அவருடைய துணைவியார் திருமதி காமாட்சி ஜெயராமன் தி. மு. கழகச் சார்பில் போட்டியிட்டார். இவருக்கும்—சிண்டிகேட் வேட்பாளருக்கும் நேரடி போட்டி ஏற்பட்டது.

நான்கு வல்லரசுகளின் அடிப்படை நோக்கம்?

இந்தியா-பாகிஸ்தான் எல்லைகளில் அபாய நிலவரம் முற்றுமலிருக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனவா?

இராவல்பிண்டி, அக். 21—

இந்தியத் துணைக் கண்டத்தில் சமாதானத்திற்கு ஆபத்து ஏற்படுவதைத் தவிர்க்குமாறும் — சகிப்புத்தன்மை காட்டுமாறும் கூறும் கடிதங்களை இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் நான்கு வல்லரசுகள் தனித் தனியாக எழுதியுள்ளன.

அமெரிக்கா, இரஷ்யா, பிரிட்டன், பிரான்சு ஆகிய இந்த நான்கு வல்லரசுகளும் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பினர்கள்; இந்தியா — பாகிஸ்தான் எல்லைகளில் உள்ள அபாய நிலவரம் மேலும் முற்றிவிடக் கூடாது என்று தடுக்கும் நோக்கத்துடன் இந்த நான்கு வல்லரசுகளும் புதுடில்லியுடனும் — இசுலாமாபாத்துடனும் தொடர்புகொண்டு வருகின்றன.

இந்தக் கடிதங்களின் விவரங்கள் தெரியவில்லை; அதிகாரபூர்வமாக இதுவரையில் இவை உறுதி செய்யப்படவில்லை.

'பதட்ட நிலை இருக்கிறது' என்பதை இங்குள்ள பாகிஸ்தான் இராஜதந்திரிகளும் ஒப்புக்கொள்கின்றனர்; ஆயினும், 'இந்தியாவோ — பாகிஸ்தானோ போரை விரும்பவில்லை' என்று அவர்கள் கருதுகின்றனர்.

மும்முறை ஏமாற்றப்பட்டோம்

வரலாறு இதனை நமக்கு உணர்த்துகிறது

இந்தியாவின் உரிமை — அரசு அதிகாரி விளக்கம்

"இந்தியாவும் — பாகிஸ்தானும் தங்கள் எல்லைகளிலிருந்து படைகளைத் திரும்பப்பெற வேண்டுமென்று தெரிவிக்கப்படும் யோசனை, வங்க தேச அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு எந்த விதத்திலும் உதவாது என்று இந்தியா தெளிவுபடுத்தியிருக்கிறது; மேலும், நேரடிப் பிரரணைகள் எதவும் வரவில்லை; ஆனால் சில யோசனைகள் — குறிப்பாக அமெரிக்காவிடமிருந்து கிடைத்திருக்கின்றன" என்று இந்திய அரசின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

படைகளைத் திரும்பப்பெறும் யோசனையை ஏன் இந்தியா நிராகரித்தது என்பதை அவர் விளக்குகையில், 'வரலாற்றைக் கவனித்தோமானால், இந்தியாமீது பாகிஸ்தான் மும்முறை ஆக்கிரமிப்புச் செய்திருக்கிறது — நாம் ஏமாற்றப்பட்டுள்ளோம்; மும்முறை தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளோம்; மேற்கொண்டு நாம் எந்த 'விஷப்பரீட்சை'யையும் மேற்கொள்வதற்குத் தயாராக இல்லை; அதே நேரத்தில், இந்தியா தாக்குதல் நடவடிக்கையில் இறங்காது; ஆனால், பாகிஸ்தான் தாக்குமானால் பாகிஸ்தானுக்குத் தக்க பதிலடி கொடுப்போம்' என்றார்.

வல்லரசுகள் தவறுமானால் பிற வழிமுறைகளைப் பற்றி இந்தியா நிச்சயம் ஆராயும்

"அகதிகள் எவ்வித அச்சமுமின்றித் தாயகம் திரும்புவதற்கான சூழ்நிலைகளைப் பாகிஸ்தான் ஏற்படுத்த வேண்டுமென்பதில் இந்தியா உறுதி கொண்டிருக்கிறது; அவ்வாறு பாகிஸ்தான் தக்க சூழ்நிலைகளை ஏற்படுத்தவில்லையென்றால், அனைத்து நாடுகள், அகதிகள் தாயகம் திரும்புவதற்கான சூழ்நிலையை உண்டாக்கப் பாகிஸ்தானை நிர்ப்பந்திக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம்; உலக நாடுகளும் நிர்ப்பந்திக்கத் தவறுமானால் நாம் பிற வழிமுறைகளைப் பற்றி ஆராய வேண்டியிருக்கும்; நாம் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கை எந்த மாதிரியாக — எந்த வடிவத்தில் இருக்கும் என்பதை என்னால் இப்போது கூற முடியாது; பாகிஸ்தானுடன் நாம் போரைத் துவக்க விரும்பவில்லை; ஆனால் நமது நாட்டு நலனைக் கருதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு நமக்கு உரிமை உண்டு" என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

அமெரிக்காவின் வேண்டுகோளை இந்தியா நிராகரித்தது ஏன்?

நிதானம் காட்ட வேண்டுமென்பதன் எல்லைக்கு வரையறைதான் என்ன?

வாஷிங்டன், அக். 21—

இந்தியா — பாகிஸ்தான் எல்லைகளில் படைக் குவிப்புப் பிரச்சினையில் நிதானம் காட்ட வேண்டுமென்ற அமெரிக்காவின் வேண்டுகோளை இந்தியா நிராகரித்துவிட்டது.

"இந்தப் பிரச்சினையில் நிதானம் காட்டவேண்டுமென்று வற்புறுத்துவதன் மூலம் இந்தியாவுடன் உள்ள உறவுகளை அமெரிக்கா மேலும் மோசமாகத்தான் செய்கிறது" என்று இங்குள்ள இந்திய தூதரகப் பிரதிநிதி ஒருவர் கூறினார்.

"நிதானம் — கட்டுப்பாடு என்ற பேச்செல்லாம் அமெரிக்க வெளிநாட்டுத் துறையிலிருந்துதான் வெளிவருகிறது; தொடர்ந்து நாங்கள் நிதானம் காட்டிவந்திருக்கிறோம் என்பதை அவர்கள் உணர்ந்திருப்பதாகக் காட்டிக்கொள்ள வேண்டும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

"அமெரிக்க எல்லைகளில் இம்மாதிரி சம்பவம் நடந்து — 90 இலட்சம் அகதிகள் அமெரிக்காவுக்குள் வந்திருந்தால் அமெரிக்கா என்ன செய்திருக்கும்?" என்று அந்த அதிகாரி கேட்டார்.

"நிலைமை மேலும் மோசம் அடையாமல் தடுக்க இரு நாடுகளும் நிதானம் காட்ட வேண்டுமென்று பகிரங்கமாகவும் — அந்தரங்கமாகவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கின்றன" என்று அமெரிக்க வெளிநாட்டுத் துறை தகவல் அதிகாரி ஒருவர் கூறினார்.

"அமெரிக்காவின் வேண்டுகோளை இங்கு நாங்கள் நிதானமான முறையில் நிராகரித்திருக்கிறோம்; ஆனால், புதுடில்லியின் நிராகரிப்பு இன்னும் கடுமையானது" என்று இந்திய தூதரக அதிகாரி ஒருவர் சொன்னார்.

"நிலைமை மிகவும் அபாயகரமாகப் போய்க்கொண்டிருக்கிறது இந்தப் போக்கை நாங்கள் கவனமாகப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம்" என்று அமெரிக்க அதிகாரிகள் கூறுகின்றனர்.

பயிர்ப் பூச்சிகளை விரட்டப் புதிய வழி

பயிர்களைத் தாக்கும் பூச்சிகள் மற்றும் எலிகளை விரட்டியடிக்க ஒரு புதிய முறை பற்றி பிரிட்டிஷ் நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தனி ஒளிக் கற்றைகளைப் பாய்ச்சி, பூச்சிகளே வராமல் செய்வதுதான் அந்த முறை.

பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்தினால் பயிரை அழிக்கும் பூச்சிகளும் மற்றவைகளும் சாகின்றன. இப்படி அவற்றை அழிக்காமல் — அதே நேரம் பயிர்களை அண்டவிடாமல் பாதுகாப்பதுதான் புதிய முறையின் அனுகூலம்.

இந்தப் பூச்சி விரட்டும் முறை மற்றும் இது தொடர்பான பல்வேறு தகவல்கள் பற்றி விவாதிக்கப் பிரிட்டனில் ஒரு மாநாடு நடைபெறவிருக்கிறது; இம்மாநாட்டில் உலகின் பல நாடுகளையும் சேர்ந்த நிபுணர்கள் கலந்து கொள்கிறார்கள்.

மக்களின் விருப்பத்தைத் தகர்த்துவிட முடியாது

சட்டபூர்வ உரிமைகளை மதித்தே வங்க தேசப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது அவசியம்

தட்டிக்கழிக்க முயற்சிப்பது நிலைமையை மேலும் மோசமானதாக்கிவிடும்

இந்தியா — யுகோஸ்லேவியா கூட்டறிக்கை வற்புறுத்தல்

புதுடில்லி, அக். 21—

"மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் விருப்பத்திற்கிணங்க ஓர் அரசியல் தீர்வு காண்பதுதான் வங்க தேசப் பிரச்சினைக்கும் பரிகாரமாகும்" என்று இந்தியா — யுகோஸ்லேவியா கூட்டறிக்கையில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

இலட்சக்கணக்கான அகதிகளின் வருகையினால் இந்தியாவின் அரசியல் — பொருளாதாரத் துறைகளில் ஏற்பட்டுள்ள நிர்ப்பந்த நிலைமைகளைப் பற்றி யுகோஸ்லேவியா கவலை தெரிவித்திருக்கிறது.

"எந்த அரசியல் தீர்வும் கிழக்கு வங்க மக்களின் மறுக்க முடியாத — சட்ட பூர்வமான உரிமைகளுக்கேற்ற விதத்தில் இருக்க வேண்டும்.

"மக்கள் தமது விருப்பத்தை மிகத் தெளிவாகத் தெரிவித்துவிட்டார்கள்; அதைத் தட்டிக்கழித்து வேறுவிதமாக எதுவும் செய்வது, பிரச்சினையை இன்னும் மோசமானதாக்கிவிடும்.

"இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை ஒத்திப் போடுவது நிலைமையை மேலும் மோசமானதாக்கிவிடும் என்பதை இரு நாடுகளும் ஒப்புக்கொண்டிருக்கின்றன.

"ஷேக் முஜிபுர் ரகிமான் கதி மற்றியும், இவரை இப்போது நடத்தும் விதத்தினால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளைப் பற்றியும் யுகோஸ்லேவியா கவலை தெரிவித்திருக்கிறது."

வானொலி பெட்டிக்குள் தொலைபேசி!

டிரான்சிஸ்டர் ரேடியோ விலேயே, அபயக்குரல் கொடுக்கவோ அல்லது உளவுச் செய்திகளை அறிவிக்கவோ வசதியாக ஒரு சிறிய 'போன்' பொருத்தி — புதிய சாதனம் ஒன்றைப் பிரிட்டனில் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள்.

பாட்டரியால் இயங்கக்கூடிய இந்த டிரான்சிஸ்டர் போன் கருவியின் மூலம் யாருக்கு வேண்டுமானாலும் செய்தி அனுப்ப முடியாது; காவல் துறையினரில் சில முக்கிய பிரிவினருக்கு மட்டுமே தகவல் தரமுடியும்.

ஆபத்து நெருங்கும்போது உடனே தெரிவித்து உதவி கோரலாம்; அல்லது, துப்பறியும் துறையினர் தங்கள் பாதையில் கிடைக்கும் தடயங்களைத் தலைமை நிலையத்திற்குத் தெரிவிக்கலாம்; உளவுச் செய்திகளையும் உடனுக்குடன் அறிவிக்கலாம்.

நிரந்தரமாக சில அலுவலகங்களுடன் இது இணைக்கப்பட்டிருக்கும்; எனவே, எண்களைச் சுழற்ற வேண்டியதில்லை; எடுத்ததும் பேசலாம். மறுமுனையில் ஆள் இல்லை என்றாலும் செய்தி பதிவாகிவிடும்.

போலீசுத் துறையினர் மட்டுமன்றி, விமான நிலையப் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் ஏற்றது இந்தக் கருவி!

அருப்புக்கோட்டை நகரசுத்தித் தொழிலாளர் சங்கம்

தலைவராக நல்லதம்பி தேர்வு

அருப்புக்கோட்டை நகரசுத்தித் தொழிலாளர் சங்கத் தேர்தல் சம்பந்தமான பேரவைக் கூட்டம், 6—9—71-ல், இராமநாதபுரம் மாவட்ட தி. மு. க. அவைத் தலைவர் சிவ. சண்முகசுந்தரனார் தலைமையில் நடைபெற்றது; அதுபோது, சங்கத் தலைவராக திரு. ப. பெ. ந. நல்லதம்பி; துணைத் தலைவராக கு. முத்து; செயலாளராக கு கருப்பையா; துணைச் செயலாளராக ஏ. சுப்பையா; பொருளாளராக அ சுப்பன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயற்குழு உறுப்பினர்களாக மா. கருப்பன், மு. முனியாண்டி, வே. மணிவேல், சு. கந்தன், கு அழகிரி ஆகியோரும்; ஆலோசகர்களாக இராமநாதபுரம் மாவட்ட தி. மு. க. அவைத் தலைவர் சிவ. சண்முகசுந்தரனார், மற்றும் நகரமன்ற உறுப்பினர்களான கா. மீ. மீ பாலசுந்தம், எல். வேலுச்சாமி, சு. நடராசன், ஏ. திராவிடமணி, பி எஸ் சுந்தரமகாலிங்கம், கே. எஸ். பொன்னையா ஆகியோரும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாநிலங்கட்கு மத்திய அரசு தாக்கீது

உணவுத் தானிய விநியோக ஏற்பாடுகளை அதிகரிக்க உத்தரவு

தட்டுப்பாட்டைத் தவிர்த்து விலையேற்றத்தைத் தடுக்க நடவடிக்கை

புதுடில்லி, அக். 20—

அரசாங்க உணவுப் பொருள் விநியோக ஏற்பாடுகளை அதிகப்படுத்த உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கும்படி எல்லா மாநிலங்களுக்கும் மத்திய அரசு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறது; அதில் கூறப்பட்டிருப்பதாவது:—

"இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் வெள்ளத்தாலும் — வறட்சியாலும் உணவுப் பொருட்கள் கிடைப்பது தட்டுப்பாடாக இருக்கிறது; விலையும் உயர்ந்திருக்கிறது; ஆகவே, அரசாங்கம் தனது உணவுப் பொருள் விநியோக ஏற்பாடுகளை அதிகப்படுத்த வேண்டும்; குறிப்பாக, கிராமப்புறப் பகுதிகளிலும் எட்டாக்கைப் பகுதிகளிலும் இது அதிக அவசியமாகும்.

கடந்த மூன்று மாதங்களில் சாதாரணமாக ஒவ்வோர் ஆண்டிலும் உயரும் அளவைக் காட்டிலும் அதிகமாக உணவுப் பொருட்களின் விலைகள் உயர்ந்தன.

ஆந்திரம், மாராட்டிரம், அசாம், மைசூர் ஆகிய மாநிலங்களில் ஏற்பட்ட வறட்சியும் — உத்தரப் பிரதேசம், பீகார், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் இதுவரை இல்லாத அளவுக்கு வெள்ளம் ஏற்பட்டதும் இதற்குக் காரணங்களாகும்.

நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் கோதுமை ரேஷன் அளவை அதிகப்படுத்த வேண்டும்; அல்லது மக்கள் வேண்டும் அளவுக்கு வாங்க அனுமதிக்க வேண்டும்.

மாவு அரைக்கும் ஆலைகளுக்கு — அவைகளுக்கு லைசென்சு வழங்கப்பட்ட முழு அளவுக்குக் கோதுமை வழங்கவேண்டும்; அவசியமான பகுதிகளில் நியாய விலைக் கடைகளின் மூலம் மோட்டா ரகத் தானியங்கள் வழங்கவேண்டும்; கூட்டுறவுக் கடைகள் மூலமாகவும் — தனிப்பட்ட வர்த்தகர்கள் மூலமாகவும் பகிரங்க விற்பனைக்குக் கோதுமையும் மோட்டா ரகத் தானியங்களும் விடுவிக்க வேண்டும்.

அரசாங்க விநியோக ஏற்பாடுகளின் மூலம் அதிகமாக வழங்கும் கோதுமைத் தேவையை மத்திய இருப்பிலிருந்து மத்திய அரசாங்கம் கொடுக்கும்.

ஒவ்வொரு பகுதியிலும் நெருக்கடி ஏற்படும்போது, சொன்ன மாத்திரத்தில் உணவுப் பொருள் விற்பனையைத் தொடங்கக்கூடிய நியாய விலைக் கடைக்காரர்கள் பட்டியல் ஒன்றை மாநில அரசுகள் வைத்துக்கொள்வது நல்லது.

விநியோகத்திற்காகும் செலவுகளைக் குறைத்து நியாய விலைக் கடைகளில் இன்னும் குறைந்த விலையில் உணவுப் பொருள்கள் கிடைக்கச் செய்யவேண்டும்.

நியாய விலைக் கடைகள் இல்லாத அல்லது மிகக் குறைவாக இருக்கின்ற கிராமப்புற எட்டாக்கைப் பகுதிகளிலும் வாராந்தர சந்தைகளின் மூலம் அரசாங்கம் உணவுப் பொருள்களை விடுவிடுக்கும் சாத்தியக்கூறு பற்றி மாநில அரசுகள் ஆலோசிக்கலாம்.

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் — கூட்டுறவு அங்காடிகள் மூலம் அதிகமாக உணவுப் பொருள்களை விற்பனை செய்வது பற்றியும் ஆலோசிக்கலாம்."

கழக அரசுமீது காமராசர் சுமத்தும் வீண்பழி

தொழிற் சங்கப் பணிகளில் அரசு தலையிடுகிறது என்பதை மெய்ப்பிக்க முடியுமா?

கழகத் தொழிற் சங்கப் பொதுச்செயலாளர் காட்டூர் கோபால் அறைகூவல்

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைப் பொதுச்செயலாளர் காட்டூர் கோபால் எம்.எல்.சி. அறிவிப்பதாவது:—

"கழகச் சார்புடைய தோழர்கள் முன்னின்று நடத்துகிற தொழிலாளர் முன்னேற்ற சங்கங்கள், தமிழ்நாட்டில் தனியார் துறை — கூட்டுறவுத் துறை — பொதுத் துறைகளில் பணியாற்றும் இலட்சத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக்கொண்டு 180 வரையில் இயங்கி வருகின்றன.

இவைகளிலே பெரும்பாலான சங்கங்கள், தி. மு. கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னமேயே பல ஆண்டுகளாக இயங்கிவருகின்றவைகளாகும்.

நாம் தொழிற் சங்கங்களைத் துவக்குவதற்கு முன்னமேயே மாற்றுக் கட்சியினர் நடத்துகிற ஏனைய சங்கங்களில் உறுப்பினர்களாக இருந்துவந்த தொழிலாளர்கட்கு அந்தச் சங்கங்களின் நடைமுறைகள் பிடிக்காததாலும், அவற்றினைவிட முன்னேற்றச் சங்க நடைமுறைகள் சிறந்தவை என்கிற காரணத்தாலும்தான், தொழிலாளர்களிடையே முன்னேற்றச் சங்கங்களுக்கு ஆதரவு பெருகிவந்துள்ளது.

ஏற்கனவே இயங்கிவந்த மாற்றுச் சங்கங்களுக்குத் தொழிலாளர்களிடையே நல்ல நம்பிக்கை இருந்திருக்குமானால், கடந்த 15 ஆண்டுகளில் முன்னேற்றச் சங்கங்கள் வளர்கின்ற நிலைமையும் — ஏனைய சங்கங்கள் தளர்ந்து வருகின்ற நிலையையும் உருவாகியிருக்காது.

முன்னேற்றச் சங்கங்களின் முறையான நடவடிக்கைகள் — திட்டமிடப்பட்ட நடைமுறைக்கொள்கைகள் — பெற்ற உரிமைகளைப் பேணிக் காப்பாற்றுவதற்கும், பெறவேண்டிய உரிமைகளைப் பெற்றுத் தருவதற்கும் ஆற்றி வருகிற நற்பணிகளின் மூலம் தான் நாள்தோறும் தொழிலாளர் முன்னேற்றச் சங்க

(4-ம் பக்கம் பார்க்க)

ஏழாண்டுத் திட்டம் 6 ஆண்டிலேயே முடியும்

குடிசைகள் இருந்த இடமெல்லாம் அடுக்கு மாடிக் கட்டடங்களாகக் காட்சி தரும்

ஏழைகள் குடில்களை மட்டுமல்ல — அவர்கள் வாழ்க்கை நிலையையும் மாற்றப் பாடுபடுகிறது கழக அரசு

பெரம்பூர் குடிசை மாற்று வாரிய அடிக்கல் நாட்டு விழாவில் முதலமைச்சர் கருணாநிதி விளக்கவுரை

சென்னை, அக். 20—

"தற்போது சென்னை நகரில், குடிசைவாசிகட்கு — குடிசைக்குப் பதில் — அடுக்கு மாடி வீடுகள் கட்டிக் கொடுத்து வரும் குடிசை மாற்று வாரியத்தின் பணிகள் படிப்படியாகத் தமிழ்நாட்டின் மற்றப் பகுதிகட்கும் விரிவுபடுத்தப்படும்" என்று முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் அறிவித்தார்.

"ஏழாண்டுக் காலத்தில் சென்னையில் அறவே குடிசையே இல்லாத நிலையை உருவாக்கவேண்டும் என்று திட்டமிட்டிருந்தபோதிலும், போகிற போக்கில் ஐந்தாறு ஆண்டுக்குள்ளேயே நமது இலட்சியம் நிறைவேறிவிடும் நிலை இருந்துவருகிறது" என்றும் அவர் தெரிவித்தார்.

பெரம்பூர் தொகுதி புளியந்தோப்புப் பகுதியில் உள்ள பார்வதி கக்கன் காலனியில் ரூ. 23 இலட்சம் செலவில் குடிசைவாசிகளுக்காகப் புதிதாகக் கட்டப்படவிருக்கும் 378 குடியிருப்புகளுக்கு முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார்.

விழாவுக்கு தாழ்த்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் தலைமை தாங்கினார்.

அனைவரையும் வரவேற்றுக் குடிசை மாற்று வாரியத் தலைவர் இராம. அரங்கண்ணல் பேசுகையில், மூன்று அறைகள் கொண்ட நான்கு மாடிக் கட்டடங்களாகக் கட்டித் தரப்படும் என்றும், தவணை முறையில் இந்தக் குடியிருப்புகளை வாங்கிக்கொள்ள விரும்புவோருக்கும் தேவையான வசதிகள் செய்து தரப்படும் என்றும் அவர் சொன்னார்.

முதல்வருக்கு வெள்ளிக் குத்து விளக்கு ஒன்றை மாநகராட்சி மன்ற உறுப்பினர் நல்லதம்பி வழங்கினார்.

திட்ட விவரங்களை விளக்கி குடிசை மாற்று வாரியத் தலைமைப் பொறியர் கே. ஆர். இராமசாமி பேசினார்.

கலைஞர் தமது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது:—

"டில்லி போன்ற இடங்களில் குடிசைகளை மாற்றியிருக்கிறார்கள்; ஆனால், அங்கே வழ்ந்த மக்களைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை; 'குடிசைப் பகுதிகளால் நகரத்தின் அழகு குறைகிறதே — நகரத்தின் எழில் குலைகிறதே — ஆகவே, நல்ல வீடுகளாக மாற்றினால் தான் வெளிநாட்டுக்காரர்கள் பாராட்டவும், புகழவும் ஏற்றதாக இருக்கும் — சுற்றுலாவுக்கு உகந்ததாகவும் இருக்கும்' என்ற அடிப்படையில்தான் குடிசைப் பகுதிகள் மாற்றப்படுகின்றன.

நகரத்தின் அழகு சோபிதமாக இருக்கத்தான் குடிசைகளை மாற்றி நல்ல வீடுகளை அமைக்கிறார்கள்.

அப்படிப்பட்ட வீடுகளில் குடியேற வருகின்றவர்கள் இலட்சாதிபதிகளாகவோ, தொழிலதிபர்களாகவோ, வசதி — வாய்ப்பு உள்ளவர்களாகவோ இருக்கலாம்.

குடிசைகள் மாற்றப்படுவதன் மூலம், இருக்கின்ற கோரம் போக்கப்பட வேண்டும் — அலங்கோலம் மாற்றப்பட வேண்டும் — அழகு மிளிர வேண்டும் — என்ற அடிப்படையில் அவர்கள் பிரச்சினை முடிகிறது.

ஆனால் தமிழக அரசு ஏற்படுத்தியிருக்கின்ற இந்த வாரியம், 'குடிசைப் பகுதிகளை மட்டும் மாற்ற வேண்டும்' என்று கருதவில்லை; 'அங்கிருக்கின்ற மக்கள் வாழ்வையே மாற்றவேண்டும்' என்று கருதுகிறது.

அந்தப் பகுதிகளில் யார் யார் வாழ்ந்தார்களோ அதே மக்கள் — அதே நபர்கள், மாற்றப்பட்ட இடத்தில் வாழும் உரிமையை செய்து அளிக்கும் அரசு இந்தியாவிலேயே தமிழக அரசுதான்!

நமது இலட்சியமே 'குடிசையில் வாழ்கின்ற மக்களை அதே இடத்தில் கட்டப்படும் மாடி வீடுகளில் குடியமர்த்த வேண்டும்' என்பதுதான்!

குடிசையில் வாழ்கின்ற மக்களை வேறு இடங்களுக்குச் செல்லும்படி சொல்லும்போது அவர்களுக்கு வீட்டு வசதி செய்து தருவது மட்டுமல்ல — தொழில் வசதியையும் பார்க்க வேண்டும்.

மார்வதி கக்கன் காலனியில் குடியிருக்கின்றவர்களைக் கோட்டூருக்குப்பக்கத்திலே குடியிருக்கச் சொல்கிறோம் என்றால், அவர்களின் தொழில் — மற்ற வாழ்க்கை வசதிகள் இந்தப் பகுதியில் இருக்கும்; ஆகவே, 'தொழில் வசதி கெடாத அளவுக்குக் குடியேற்றப்பட வேண்டும்' என்கிற கொள்கையையும் ஏற்றுக்கொண்டு பணியாற்றி வருகிறோம்.

சென்னையில் மொத்தம் 602 குடிசைப் பகுதிகள் இருக்கின்றன; இவற்றையெல்லாம் இன்னும் ஏழாண்டுக்காலத்தில் வேரோடு மாற்றி — இந்த இடங்களெல்லாம், 'முன்பு குடிசைப் பகுதிகளாக இருந்த இடங்கள்' என்று சொல்லத்தக்கவிதத்தில் மாடி வீடுகளாக ஆக்குவோம் — என்ற உறுதியை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

மொத்தமுள்ள 602 குடிசைப் பகுதிகளில், இந்த ஆண்டில் 75 குடிசைப் பகுதிகள் மாற்றியமைக்கப்படும்.

இந்த ஆண்டில் 75 பகுதிகள் என்றால், அடுத்த ஆண்டில் இதைவிட அதிகமாக மாறும்.

அந்த அளவுக்கு வாரியத் தலைவர் அரங்கண்ணல் அவர்கள் விடா முயற்சியோடும், தீவிர முனைப்போடும் — நான் எந்த அளவு இந்தப் பணியில் உணர்ச்சியும் எழுச்சியும் ஈடுபாடும் கொண்டிருக்கிறேனோ அதற்கேற்ப — கொஞ்சமும் குறையாத அளவுக்கும் பாடுபட்டு வருகிறார்.

ஆகவே, அடுத்த ஆண்டு 100 இடங்களுக்குமேல் மாற்றப்படும்; அதற்கும் அடுத்தடுத்த ஆண்டுகள் மேலும் வேகமாக இந்தப் பணி நிறைவேற்றப்படும்.

சென்னையில் இந்த வேலை நடக்கின்ற அதேநேரத்தில், தமிழகத்தில் படிப்படியாக, 'இந்த மாவட்டத்தில் இன்ன நகர்' என்கின்ற அளவுக்கு இந்தத் திட்டம் விரிவாக்கப்பட்டு வேலை தொடங்கும்.

அம்மையார் அவர்கள் பேசும்போது நாங்கள் பெயர் வைத்தால் மட்டும் எதிர்க்கிறீர்களே நீங்கள் பெயர் வைத்தது பற்றி நாங்கள் ஏதாவது கேட்டோமா என்று குறிப்பிட்டார்; 'நீங்கள் பெயரை மாற்றுவதில் — பெயரைச் சூட்டுவதில் அக்கறை காட்டினீர்கள்; ஆனால், மக்கள் வாழ்வை மாற்றிட அக்கறை காட்டவில்லை; இந்த அரசு அதைச் செய்துவருகிறது' என்றார்.

ஏற்கனவே இருந்த பெயர்களை மாற்ற வேண்டுமென்று இந்த அரசு கிஞ்சிற்றும் எண்ணவில்லை; அந்த அளவுக்கு — நமது பரந்த மனப்பான்மைக்கு அடையாளமாகத்தான் 'இருக்கின்ற அந்தப் பெயரே நல்ல பெயர் — நிலைத்திருக்கட்டும்' என்று கருதுகிறோம்.

மார்வதி கக்கன் காலனியா — மாநகராட்சியில் தீர்மானம் நிறைவேறியதா — மாநகராட்சியின் ஒப்புதல் பெறப்பட்டதா — என்றெல்லாம் ஆராயவில்லை; அப்படிப்பட்ட மிகக் குறுகிய மனப்பான்மையோடு ஆராய்ச்சி நடத்தவில்லை.

ஏனென்றால், நாம் படித்த பள்ளி — நாம் பயின்ற பாசறை அப்படிப்பட்டதல்ல!

பெருந்தன்மைக்கே பெயர் பெற்ற அண்ணாவின் பாசறையில் பயின்றவர்கள் நாம்!

'மார்வதி கக்கன் காலனி என்ற பெயரை மாற்றினால்தான் இந்தப் பகுதியை மாற்றுவோம்' என்று சொல்லிடவில்லை — எண்ணிடவில்லை.

'எத்தனையோ இடையூறுகளுக்கிடையே இந்தக் காரியத்தை நிறைவேற்றி வருகிறோம்: மத்திய அரசு தகுந்த உதவி செய்யவில்லை' என்றெல்லாம் வாரியத் தலைவர் அரங்கண்ணல் கூறினார்.

'யார் செய்தாலும் செய்யாவிட்டாலும் கவலையில்லை' என்று தமிழக அரசு ரூ. 4 கோடியை இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கியிருக்கிறது — காரியம் நடைபெற்று வருகிறது.

இந்தத் தொகுதியில் 75 குடிசைப் பகுதிகள் இருக்கின்றன; இந்த ஆண்டு 10 பகுதிகளாவது மாற்றப்படும்.

அம்மையார் தொகுதியில் அதிகப் பகுதிகள் இந்தத் திட்டத்தினால் பயனடைகின்றன; இந்த ஆண்டு மட்டும் ரூ. 1 கோடியே 30 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

எனது சைதைத் தொகுதியைவிட அதிக வசதியை அம்மையாரின் தொகுதி பெறுகிறது என்பதைப் பார்க்கும்போது கொஞ்சம் பொறுமையாகக் கூட இருக்கிறது; என்றாலும், சைதைத் தொகுதியைவிட இந்தத் தொகுதியில் குடிசைகள் ஏராளம்.

மக்கள், புழுவாய் நெளிந்தும், வளைந்தும் வாழ்ந்துகொண்டிருக்கிற தன்மையிலிருந்து வாழ்விக்க — உய்விக்க இந்த அரசு கடமையாற்றி வருகிறது.

வள்ளலார் பாடினார் — 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று; நாங்களும், ஏழைகள் — பாட்டாளி மக்கள் வாடிக்கொண்டிருக்கக் கண்டு வாடுகிறோம்; அவர்கள் வாழ்வின் மலர்ச்சிக்காகப் பாடுபடுகிறோம்!

உங்கள் வாழ்வின் ஒளியை மையமாக வைத்துப் பாடுபட்டுப் பணியாற்றுகிறோம்!

இன்னும் ஆறாண்டுக் காலத்தில் இந்தப் பகுதி எப்படியெல்லாம் மாற்றம் அடையப்போகிறது என்கிற நினைப்போடு இந்தக் காரியத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம்.

இந்த மேடையில் அமைத்துள்ள இடம் எந்த அளவுக்குப் பயங்கரப் பூமியாக இருந்தது என்பதை, வாரியத் தலைவர் தெரிவித்தார்.

அதேபோல், 'கிரே நகர் பள்ளம்' என்கின்ற பகுதியின் பெயரே பள்ளம்; அப்படிப்பட்ட இடத்தில் அடிக்கல் நாட்டி — இரும்புத் தூண்களையெல்லாம் நட்டு — அங்கே கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது.

இப்படியெல்லாம் சிரமங்கள் ஏன்? அமைச்சர்களுக்கு வீடு கட்டவா? வாரியத் தலைவருக்கு பங்களா கட்டவா? இலட்சாதிபதிகளுக்கோ, சீமான் வீட்டுப் பிள்ளைகளுக்கோ இடம் தரவா? அல்லவே அல்ல!

எங்களின் தோழர்களாகிய உங்களுக்காக — உடன் பிறவா சகோதர சகோதரிகளாகிய உங்களுக்காக — எங்களின் இரத்தமாய் — உணர்ச்சியாய் — எங்களின் சொந்தக்காரர்களாக உள்ள உங்களுக்காக — எங்கள் உறவினர்களாகிய உங்களுக்காக, உங்களால் அமைக்கப்பட்ட இந்த அரசு பாடுபட்டு வருகிறது."

தண்ணீருக்குள் தகவல் தொடர்பு

நாட்கணக்கில் தண்ணீருக்கு அடியில் இருந்தபடியே பல்வேறு கடலடி ஆராய்ச்சிகள் மேற்கொள்ளும் நிபுணர்கள், அங்கிருந்தபடியே அவ்வப்போது மேலே உள்ள தகவல் நிலையங்களுக்குச் செய்தி அனுப்பப் புதுவகையான — கையடக்கமான கருவி ஒன்று பிரிட்டனில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தண்ணீருக்குக் கீழே சுமார் 300 அடி ஆழத்திலிருந்து மேலே கரைக்கு அல்லது கப்பலுக்குத் தகவலை அனுப்ப இக்கருவி பயன்படும்.

கையாளுவதற்கு இலகுவான — நவீனமான இந்தக் கருவியைத் தொடையில் வைத்துக் கட்டிக்கொண்டு தண்ணீருக்குள் குதித்துவிடலாம்; அங்கிருந்து வெளியே சுமார் 2,000 அடி தூரம் வரையில் உள்ள எவருக்கும் செய்தி அனுப்பமுடியும்.

பாட்டரியால் இயங்கக்கூடிய இந்த நவீன கருவி, ஒருமுறை புதுப்பித்தால் இரண்டு மணி நேரம் இயங்கக்கூடியது; அதன் பிறகு தீர்ந்துவிட்டால் பாட்டரியை மீண்டும் 'சார்ஜ்' செய்யும் கருவியும் இதிலேயே உள்ளது.

இராஜஸ்தான் எல்லையில் பாகிஸ்தான் டாங்கிப் படைகள்

பீரங்கிப் படைகளும் குவிக்கப்படுகின்றன

ஜெய்ப்பூர், அக். 21—

இராஜஸ்தான் எல்லையில் பாகிஸ்தான் மிக வேகமான இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறது.

கங்கா நகருக்கு எதிரில் எல்லையிலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவில் ஒரு டாங்கிப் படையைப் பாகிஸ்தான் கொண்டுவந்திருக்கிறது; அப்பகுதியில் பீரங்கிப் படைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

பார்மருக்கு எதிரில் எல்லைக்கு 40 கி.மீ. தொலைவில் மற்றொரு டாங்கிப் படையைப் பாகிஸ்தான் கொண்டுவந்திருக்கிறது. கங்கா நகரில் பாகிஸ்தான் படைகள் நுழைந்து விட்டன.

வங்க தேச எல்லை நெடுகிலும் பாகிஸ்தான் படைகள் குவிப்பு

அகர்த்தலா, அக். 21—

அசாம், திரிபுரா, மேகாலயா, மேற்கு வங்காளம் ஆகியவற்றை ஒட்டிய வங்காள தேச எல்லை நெடுகிலும் -- 1,400 மைல் தொலைவுக்குப் பாகிஸ்தான் படைகள் குவிக்கப்படுகின்றன.

பல இடங்களில் அரண்களுடன்கூடிய குழிகளைப் பாகிஸ்தானியர் அமைத்திருக்கிறார்கள்.

வங்க தேசத்தின் உட்பகுதியில் இருந்த 80,000 பாகிஸ்தான் படைகளில் பெரும்பாலானவை எல்லையில் கொண்டுவந்து நிறுத்தப்படுகின்றன.

திரிபுராவின் தென் கோடியில் 'சப்ரூம்' என்ற சப்-டிவிஷன் இருக்கிறது; அதற்கு எதிராக வங்காள தேச எல்லையில் நான்கு பகுதிகளில் அரண்களுடன் கூடிய குழிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

சிட்டகாங் மாவட்டத்தின் பல பகுதிகளிலும், நவகாளி மாவட்டத்தின் இரு பகுதிகளில் பீரங்கிகள் -- இராணுவ வண்டிகளுடன் பாகிஸ்தானியப் படைகள் குவிக்கப்பட்டு வருகின்றன.

'பேனி' பகுதியிலும் பாகிஸ்தான் இராணுவம் கணிசமான அளவில் குவிக்கப்படுகிறது.

பாசுராம் என்ற இடத்தில் ஆறு முனைகளில் பீரங்கிப் படைப் பிரிவுகள் நிறுத்தப்பட்டுள்ளன; நீண்டதூரம் சென்று விழக்கூடிய குண்டுகளைச் சுடும் பீரங்கிகள் ஆறு முனைகளிலும் நிறுத்தப்பட்டுள்ளன.

அங்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ள இரசாக்கர்களுக்கு உதவியாக 600 இராணுவத்தினர் அனுப்பப்பட்டிருக்கின்றனர்.

அசாம் பகுதியில் முட்கம்பி வேலிகள்

அசாம் மாநிலத்தில் உள்ள கச்சார் மாவட்டத்திற்கு எதிரில் உள்ள வங்காள தேச எல்லைப் பகுதியில் முட்கம்பி வேலி போடப்பட்டுள்ளது.

அப்பகுதியிலும் குழிகள் வெட்டும் வேலைகள் மும்முரமாக நடக்கின்றன -- படைகளும் குவிக்கப்படுகின்றன.

பாகிஸ்தான் எல்லை நகரில் இருட்டடிப்பு ஒத்திகை

சென்ற ஏழு நாட்களாக நாள் தோறும் இரவில் இருட்டடிப்பு ஒத்திகை 'ஜங்கி கஞ்ச்' என்ற பாகிஸ்தான் எல்லை நகரத்தில் நடந்துவருகிறது.

திரிபுராவில் சுடுகின்றனர்

இதற்கிடையில் சென்ற ஒரு வார காலமாகத் திரிபுராவில் இந்தியப் பகுதியில் பாகிஸ்தானியர் தொடர்ந்து சுட்டுவருகிறார்கள்; இதனால் கணிசமான சேதம் ஏற்பட்டுள்ளது.

பெட்ரோல் குண்டு வீச்சு

பாகிஸ்தான் இராணுவத்தினர், பெலோனியா நகரின்மீது பெட்ரோல் குண்டுகளை வீசினர்; அதன் விளைவாக நகரில் நான்கு வீடுகள் தீப்பற்றி எரிந்தன.

தீயை அணைப்பதற்காகச் சென்ற தீயணைப்புப் படையினர்மீது பாகிஸ்தான் எல்லைக்கப்பாலிலிருந்து சுட்டார்கள்.

பீதியடைந்த மக்கள் வெளியேறுகின்றனர்

பெலோனியா நகரின் மீதும் சென்ற ஐந்து நாட்களாகப் பாகிஸ்தானியர் குண்டுகளை வீசி வருகின்றனர்; ஐந்து இந்தியர்கள் குண்டு வீச்சில் காயமடைந்தனர்; பீதியடைந்த மக்கள் அந்நகரிலிருந்து வெளியேறுகிறார்கள்.

திரிபுராவில், 'சோனமுரா' சப் -- டிவிஷனல் மாச்சா நகர் என்ற இடத்தில் சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று பாகிஸ்தானியர் சுட்டனர்; குண்டு வீச்சில் ஆறு பேர் இறந்தனர் -- மற்றும் பலர் காயமடைந்தனர்.

அதற்கு முந்நாள் அதே இடத்தில், பாகிஸ்தான் படைகள் சுட்டதில் ஒருவர் காயமடைந்தார்.

'நகர்' என்ற இந்தியக் கிராமத்தின்மீது பாகிஸ்தான் சுட்டதில் ஒரு பெண் காயமடைந்தாள்.

கிராம மக்களைத் திட்டமிட்டு வெளியேற்றிவருகின்றனர்

வங்காள தேசத்தின் மேற்குப் பகுதியில் இராஜசாகி, குஷ்டியா, ஜெஸ்சூரா மாவட்டங்களில் சர்வ தேச எல்லைக்கு 30 கிலோ மீட்டர் தொலைவுக்குள் உள்ள கிராமங்களிலிருந்து மக்களை பாகிஸ்தானிய இராணுவத்தினர் திட்டமிட்டு வெளியேற்றி வருகிறார்கள்.

பல கிராம மக்களை பாகிஸ்தான் இராணுவத்தினர் கொல்கிறார்கள்.

பஞ்சாப்-இராஜஸ்தான் எல்லைகளில் நிலைமை

1965-ல் போர் நிறுத்தத்திற்குப் பிறகு இந்தியாவும் -- பாகிஸ்தானும் ஒப்புக்கொண்ட விதிகளை மீறி பஞ்சாப், இராஜஸ்தான் மாநிலங்களையொட்டிய சர்வ தேச எல்லையில், பல முக்கிய இடங்களில் பாகிஸ்தான் இராணுவம் இந்திய எல்லையை நோக்கி வந்திருக்கிறது.

பஞ்சாபின் மேற்கு எல்லையில் பாகிஸ்தான் எல்லைத் துப்பாக்கிப் படையும் -- இரண்டு இராணுவ டிவிஷன்களும் நிறுத்தப்பட்டுள்ளன.

முன்னேறி வருகின்ற இராணுவத்தினரை மறைக்கும் விதத்தில், பேட்டன் டாங்கிகள் உட்பட பல டாங்கிகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன.

லாகூர் பகுதியில் மேலும் இரண்டு கால்வாய்கள் வெட்டப்பட்டுள்ளன; இந்தக் கால்வாய்களின் கரைகளில் அரண்களுடன் கூடிய குழிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

நெருக்கடி குறைந்திருக்கிறதாம்

பிரெஞ்சு அமைச்சர் கூறுகிறார்

பாரிஸ், அக். 21—

இந்தியாவுக்கும்— பாகிஸ்தானுக்குமிடையே நெருக்கடி குறைந்திருப்பதாகப் பிரெஞ்சு வெளிநாட்டு அமைச்சர் மாரிஸ் ஷூமன் நேற்று கூறினார்.

"இப்பிரச்சினையில் பிரான்சு பேசாமல் இருந்துவிடவில்லை" என்றும் அவர் சொன்னார்.

பிரெஞ்சு அமைச்சரவைக் கூட்டத்தில் அவர் இத்தகவல்களைக் கூறினார்; ஆனால் இதற்குமேல் அவர் எதுவும் விரிவுபடுத்தவில்லை.

பாகிஸ்தான் விமானங்கள் அத்துமீறுகின்றன

பாகிஸ்தான் விமானப் படை எச்சரிக்கை நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றன; அதன் வேட்டை விமானங்கள் மேற்கு எல்லையில் அடிக்கடி பறக்கின்றன.

இராஜஸ்தானிலும், காஷ்மீரிலும் இந்தியாவின் வான வெளியில் பாகிஸ்தான் விமானங்களில் சில அத்துமீறி பறந்துள்ளன.

மேற்கு வங்க எல்லையில்...

மேற்கு வங்காளத்தில் நாடியா மாவட்டத்துக்கு எதிரில்—வங்காள தேசத்தில் உள்ள குஷ்டியா மாவட்ட எல்லை நெடுகிலும் பாகிஸ்தான் படைகள் மேலும் குவிக்கப்பட்டு வருகின்றன.

மேகர்பூர் என்ற இடத்தில் பெரிய அளவில் பாகிஸ்தான் படைகள் நிறுத்தப்பட்டுள்ளன. இந்திய எல்லையிலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில்தான் இந்த இடம் உள்ளது.

லக்னோவில் இருட்டடிப்பு சோதனை

இலட்சுமணபுரி, அக். 21—

நேற்றிரவு இலட்சுமணபுரி நகரில் ஒரு மணி நேரம் இருட்டடிப்புச் சோதனை பரீட்சித்துப் பார்க்கப்பட்டது.

இரவு 8-30மணிக்கு தெரு—வீட்டு விளக்குகளெல்லாம் அணைக்கப்பட்டன. சாலைப் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டது.

அவசர காலத்தில் செல்லக்கூடிய வாகனங்கள் மட்டும் அதிகம் பிரகாசமில்லாத விளக்குகளுடன் சென்றன.

பஞ்சாப் எல்லையில் தற்காப்பு ஏற்பாடு

மாநில அரசு பரிசீலனை

சண்டிகார், அக். 21—

பாகிஸ்தானிடமிருந்து போர் மிரட்டல்கள் வந்துள்ளதால் பஞ்சாப் -- பாகிஸ்தான் நிலைமை பற்றியும், சிவில் தற்காப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்துவது பற்றியும் பஞ்சாப் அரசு நேற்று ஆலோசனை நடத்தியது.

கவர்னரின் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், கவர்னரின் ஆலோசகர்--அரசின் தலைமைச் செயலாளர் ஆகியோரும்கலந்து கொண்டனர்.

போக்குவரத்துத்துறை அமைச்சர்

ச. இராமச்சந்திரன் நிகழ்ச்சிகள்

அக். 22 காலை 8-மணி : தஞ்சை —திரு. டி. கே. சீனிவாசன் எம்.பி. இல்லத் திருமணத்தில் கலந்து கொள்ளல்; 9-மணி : வடக்குத்து; 11-மணி : மேலமாம்பட்டு திருமண நிகழ்ச்சியில் கலந்துகொள்ளல்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] செங்குத்தெரு, சென்னை-15) அச்சிட்டு வெளியிடப்பெறுவது.

கழக அரசு 15 ஆண்டுக்குமேல் நீடிக்கும்

"இப்போதுள்ள ஆட்சி இன்னும் பதினைந்து ஆண்டுக்கு மேல் நீடித்திருக்கும் என நான் நம்புகிறேன்.

'பாசன வசதி -- மின்வசதி -- சாலை வசதி -- கல்வி வசதி போன்றவற்றில் மட்டுமென்றி, தமிழ் மொழி -- தமிழ் இலக்கியம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கும் இந்த அரசினர் பெருந் தொண்டாற்றி வருகிறார்கள்.

"தமிழ் மொழியின் வளர்ச்சிக்குப் பாடுபடுவேததான் இந்த அரசினருக்கு நாம் அளிக்கும் மிகச் சிறந்த பாராட்டாகும்."

--இராஜா சர் முத்தையா

(கலைஞருக்கு தமிழவேள் பட்டமளிப்பு விழாவில்)

நாவலர் யோசனை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆங்கிலப் பயிற்சிக்கு நாம் உரிய இடம் அளித்துவருகிறோம்; மூன்றும் வகுப்பிலிருந்தே ஆங்கிலம் கற்பிக்க வழி செய்கிறோம்; 'ஆங்கில மொழியைப் படிக்கவேண்டும்' என்பதில், அரசுக்கு இருக்கிற அக்கறைக்கு இது நல்ல சான்றாகும்.

ஆங்கிலத்தைக் கற்பது என்பது வேறு -- ஆங்கிலத்தின் மூலம் கற்பது என்பது வேறு.

ஆங்கில நூல்களைப் படிக்கும் வாய்ப்பை மாணவர்கள் பெற வேண்டும் என்பதற்காகத்தான், ஆங்கில மொழியில நல்ல புலமைபெறத் தக்கவகையில் மாணவர்களுக்கு வாய்ப்புக்களை உருவாக்கியுள்ளோம்."

பட்டம் பெற்றோர்

பல்கலைக் கழக வேந்தரான தமிழக ஆளுநர் கே. கே. ஷா தலைமையில் நடந்த பட்டமளிப்பு விழாவில், 1,316 மாணவர்களும், 409 மாணவிகளும் பட்டம் பெற்றுக்கொண்டனர்.

சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா அரங்கில பட்டமளிப்பு நடந்தது.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

23--10--71

மதுரை

44-வது வட்ட தி. மு. க. -- எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் அண்ணா பிறந்த நாள் விழா; மாலை 7-மணிக்கு அண்ணா திடலில்; தலைவர் : எம். எம். முத்தரசு; பேசுவோர் : இரா. வெற்றிகொண்டான், கு. திருப்பதி எம்.எல்.ஏ., கொ. காவேரி மணியம் எம்.எம்.ஏ., சொ. கோவிந்தராசன், டி. ஆர். இராசன், கே. எஸ். இராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., பொன. முத்துராமலிங்கம், சீ. மு. யாண்டியன.

கலை நிகழ்ச்சி

சென்னை 7-வது வட்டம் மக்கள் நிலை வளர்ச்சி மன்றச் சார்பில 23—10—71 மாலை 6-மணிக்கு டி. எஸ். வேலன் தலைமையிலும் -- பி. ஏ. என. இராசரத்தினம, புலவர் பொன்னிவளவன முன்னிலையிலும், டி. எம். தங்கப்பன -- சரோஜா குழுவினரின் 'இதயத்தில் அண்ணா' என்ற கலை நிகழ்ச்சி நடைபெறும்; இடம் : இராயபுரம் மார்க்கெட் அருகில்.

கழக அரசு மீது...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வளர்ச்சி அமைந்துவருகிறது.

கழக ஆட்சி பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும், கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்துவருகிறபோதும், தொழிற் சங்கத்தில் ஆட்சி அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்ததே இல்லை.

ஆனாலும், சிண்டிகேட் காங்கிரசுக் கட்சித் தலைவர் காமராசர், 'தொழிற் சங்கங்களின் ஆட்சியை பயன்படுத்தி ஊடுருவல் செய்யப்பார்க்கிறார்களே -- இது சரியா?' என்று பேசியிருக்கிறார்.

எந்தத் தொழிற் சங்கத்தில் இந்த அரசு, எந்தவகையில் ஊடுருவல் செய்துள்ளது என்பதனை ஆதாரத்துடன் மெய்ப்பிக்கட்டும்.

அதனை விட்டுவிட்டு, மக்களால் கைவிடப்பட்ட சிண்டிகேட் காங்கிரசு அமைப்பைப் போலவே தொழிலாளர்களால் கைவிடப்பட்ட தொழிற் சங்கங்களைச் சார்ந்தவர்களின் உண்மைக்கு மாறான பேச்சுக்களை நம்பி, தொழிற் சங்கங்களில் கழக அரசு ஊடுருவல் இருப்பதாகப் பேசியிருப்பது முறையல்ல.

கழகத்தின்மீதும் -- கழக அரசின் மீதும் வேண்டுமென்றே எதையாவது கூறி மாசு கற்பிக்க வேண்டுமென்று காமராசர் எடுத்துக் கொள்கிற முயற்சியே தவிர, இது வேறல்ல என்பதனை இக்கூற்று வெளிப்படுத்துகிறது.

கழகம் இன்று நினைத்தால்கூட, நாடு முழுவதும் தனக்கு இருக்கிற இலட்சக்கணக்கான உறுப்பினர்கள்--கிளைக் கழகங்கள்-- இவற்றினைக்கொண்டு எல்லா இடங்களிலும் தொழிற் சங்கங்களைத் துவக்க முடியும்; என்றாலும், அந்தப் பணிகளில் கழகம் ஈடுபடவில்லை.

ஏனைய சங்கங்களின் நடைமுறைகளால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் வந்து வலியுறுத்துகின்ற இடங்களில் மட்டுமே தொழிலாளர் முன்னேற்றச் சங்கங்கள அமைகின்றன.

மேலும், ஏனைய கட்சிகளைப்போல் தொழிலாளர் சங்கங்களைநடத்தி அதன் மூலம் வருகின்ற செல்வாக்கினை அரசியலுக்குப் பயன்படுத்திக்கொள்கின்ற நோக்கம் கழகத்திற்கு இல்லை; மாறாக, கழகம் பெற்றுள்ள செல்வாக்கினைக் கொண்டு--தொழிலாளர்களின் தேவையை நிறைவு செய்யும் பணிகளில் ஈடுபட்டிருக்கிறது.

இந்த நிலைமையில், சிண்டிகேட் காங்கிரசுத் தலைவரானாலும்-- ஏனைய எந்தக் கட்சித் தோழர்களானாலும், அரசியல் நோக்குடனும்-முன்னேற்றச் சங்க வளர்ச்சியைக் கண்டு பொறுக்க முடியாமலும் உண்மைக்குப் புறம்பாகப் பேசிவருகிறார்கள் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

கோட்டைப் பகுதியில் தடையுத்தரவு

சென்னை, அக். 21—

தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டம் இன்று துவங்குவதையொட்டி, கோட்டைப் பகுதியில் ஊர்வலங்களோ -- பொதுக்கூட்டங்களோ நடப்பதற்கும், பொதுமக்கள் கும்பலாகக் கூடுவதற்கும் சென்னை நகரப் போலீசு ஆணையர் தடையுத்தரவு பிறப்பித்துள்ளார்.

ஒரு வார காலத்துக்கு இந்தத் தடையுத்தரவு செயலில் இருக்கும்.

மேலும் உதவுகிறது

பான், அக். 21—

இந்தியாவில் உள்ள வங்க தேச அகதிகள் நிவாரணத்திற்காக மேற்கு ஜெர்மனி ஐ. நா. நிறுவனத்திற்கு மேலும் ஒரு கோடி ரூபாய் அளித்திருக்கிறது.

அகதிகளுக்கு உணவுப் பொருள்கள் வாங்குவதற்காக இந்தத் தொகை அளிக்கப்படுகிறது.

இதைச் சேர்த்து அகதிகள் நிவாரணத்திற்காக மேற்கு ஜெர்மனி ரூ. 4.90 கோடி கொடுத்திருக்கிறது.